அரசினர் சடட முன்வடிவு எண்கள்

(அ) பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் திருத்த சட்டமுன் வடிவு 1081

மாண்புமிகு திரு. ப. குழைந்தைவேலு: தலைவர் அவர்களே தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4, அரசினர்தீர்மானம் (தொடர்ச்சி)

இ. பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்

''இன்றைய நிகழ்ச்சி நிரலில், ''இனம்-6-அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)'' என்ற தலைப்பின் கீழ் 'எண். (3) தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு'

மற்றும்

'எண். (4) தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வன (திருத்த) சட்ட முன்வடிவு' இவைகள் 'எண், (1) 1981;ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்ட முன்வடிவிற்கு முன் எடுக்கப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஆ) இந்து சமய அறக் கட்டளைகள் திருத்த-சிறப்பு விதித் துறைகள் திருத்தச் சட்டமுன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:— தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 44/1981) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்'' என்று மொழிகிறேன்.

*1981ம் ஆண்டு மே மாதம் 8ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.